செ.வெ.எண்:343 நாள்:30.05.2018

திருநெல்வேலி மாவட்டம், நாங்குநேரி வட்டாட்சியர் அலுவலகத்தில் நடைபெற்ற வருவாய்த் தீர்வாயக் கணக்கு முடிப்பு நிறைவு நாள் நிகழ்ச்சியில் மாவட்ட ஆட்சித்தலைவர் / வருவாய்த் தீர்வாய அலுவலர் திருமதி.ஷில்பா பிரபாகர் சதீஷ்,இ.ஆ.ப., அவர்கள் 48 பயனாளிகளுக்கு அரசு நலத்திட்ட உதவிகளை வழங்கினார்.

-------

திருநெல்வேலி மாவட்டம் , நாங்குநேரி வட்டாட்சியர் அலுவலகத்தில் 1427ம் பசலி ஆண்டு வருவாயத் தீர்வாயக் கணக்கு முடிப்பு நிறைவு நாள் நிகழ்ச்சி இன்று (30.05.2018) நடைபெற்றது. இந்நிகழ்ச்சியில் மாவட்ட ஆட்சித்தலைவர் / நாங்குநேரி வட்ட வருவாய்த் தீர்வாய அலுவலர் திருமதி.ஷில்பா பிரபாகர் சதீஷ்,இ.ஆ.ப., அவர்கள் கலந்து கொண்டு ஸ்ரீவரமங்கைபுரம், மருகால்குறிச்சி, வில்வராயன்குளம், நாங்குநேரி, செண்பகராமநல்லூர், மேலபுத்தனேரி, இளையார்குளம், தெய்வநாயகப்பேரி, சிங்கனேரி, காரங்காடு, தெற்கு நாங்குநேரி, பம்பன்குளம், வேப்பன்குளம், தளபதிசமுத்திரம்–1, தளபதிசமுத்திரம்–2, இராஜக்கள்மங்கலம் பகுதி–1, இராஜக்கள்மங்கலம் பகுதி–2, மடம் ஆலங்குளம், இறைப்புவாரி ஆகிய 19 வருவாய் கிராமங்களை சேர்ந்த பொதுமக்களிடம் கோரிக்கை மனுக்களை பெற்றுக் கொண்டார். ஜமாபந்தியின் போது பட்டா மாறுதல் 331 மனுக்களும், இலவச பட்டா வேண்டி 98 மனுக்களும், சமூக பாதுகாப்புத் திட்ட நிதியுதவி தொடர்பாக 128 மனுக்களும் உள்பட பல்வேறு கோரிக்கைகள் அடங்கிய மனுக்கள் என மொத்தம் 696 மனுக்கள் பெறப்பட்டுள்ளது. சம்மந்தப்பட்ட துறை அலுவலர்கள் பொதுமக்களின் கோரிக்கை மனுக்கள் மீது உடன் நடவடிக்கை மேற்கொண்டு பதில்களை வழங்க வேண்டுமென மாவட்ட ஆட்சித்தலைவர் அவர்கள் உத்தரவிட்டார். மேலும், இப்பகுதி கிராம கணக்கு புத்தகங்களை பார்வையிட்டு ஆய்வு செய்தார்.

தொடர்ந்து, சிங்கிகுளம் பழைய கிராமம் பகுதியில் 40 பயனாளிகளுக்கு இலவச வீட்டுமனைப் பட்டாக்களையும், 8 பயனாளிகளுக்கு புதிய மின்னணு குடும்ப அட்டைகளையும் மாவட்ட ஆட்சித்தலைவர் அவர்கள் வழங்கினார்.

இந்நிகழ்ச்சியில், மாவட்ட ஆட்சியர் அலுவலக மேலாளர்கள் (பொது) திரு.சிவக்குமார், (குற்றவியல் பிரிவு) திரு.சேக்அப்துல்காதல், நாங்குநேரி வட்டாட்சியர் திரு.வாக்கீஷ், துணை வட்டாட்சியர்கள் திரு.பாலசுப்பிரமணி, திரு.குமார், திருமதி.முருகேஸ்வரி மற்றும் அலுவலர்கள் பொதுமக்கள் கலந்து கொண்டனர்.

வெளியீடு : செய்தி மக்கள் தொடர்பு அலுவலகம், திருநெல்வேலி.